ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

अग्रे वन्हिः पृष्ठे भानूरात्रौ चुबुकसमर्पितजानुः ।
करतलभिक्षा तरुतलवासस्तदपि न मुंचत्याशापाशः ॥

अग्रे - முன்பக்கத்தில்
वन्हिः - அக்னியிருக்கிறது.
पृष्ठे - பின்பக்கத்தில்
भानुः - சூர்யன் பிரகாசிக்கிறார்.
रात्रौ - ராத்திரியில்
चुबुकसमर्पितजानुः - தாவாக்கட்டையில் வைக்கப்பட்டிருக்கிற முழங்காலையுடையவர்
करतलभिक्षा - கையிலேயே பிக்ஷை எடுக்கப்படுகிறது.
तरुतलवासः - மரத்தின் நிழலில் வஸிக்கப்படுகின்றது.
तदपि - அவ்விதமிருப்பினும்
आशापाशः - ஆசைஎன்கிற கயிற்றுக் கட்டானது
नमुंचति - விடவில்லை.

சிறந்த வைராக்கியத்தைப் பெறுவதற்குற்ற மேன்மையான ஸாதனங்களிருப்பினும் வைராக்கியமேற்படாமல் விஷயங்களிலிருக்கும் ஆசையானது விலகாமல் ஹிம்ஸிக்கிறதென்று இதினால் அறிவிக்கப்படுகிறது.

ஒருவன் உக்கிரமான தவத்தில் நிலைபெற்றிருப்பவர்கள்போல் தனக்கெதிரில் அக்கினியை வளர்த்துக்கொண்டும் மற்றொரு பக்கத்தில் சூர்யனுடைய தேஜஸ்ஸாகிற அக்னியையும் வைத்துக்கொண்டிருக்கிறான். இரவு பூராவும் தன் முழந்தாளில் தாவாக்கட்டையை வைத்துக்கொண்டு ஸமாதியிலிருப்பவன்போல் இருக்கிறான். ஆகார விஷயத்திலும் அதிகமாகச்சேர்த்து வைத்துக்கொண்டு ஸகல ஸாதனங்களுடனும் தகுந்த ஜாகையில் இருந்து உண்ண வேண்டுமென்று கருதாமல் அவ்வக்காலத்தில் கிடைத்ததைக் கையிலேந்தி அக்கணமே புசித்துப் பசியையாற்றிக் கொள்ளுகிறான். மரங்களுடைய அடித்தலத்தையே தனக்கு இல்லமாகவும் உபயோகப்படுத்திக்கொள்கிறான். இவ்வித நிலமையிலிருந்தும் விஷயங்களிலுள்ள பற்றுதல் விடாமல் கஷ்டப்படுகிறான். வைராக்கியமில்லாமல் எந்தமாதிரி ஸாதனங்களை யனுஷ்டித்தாலும் உபயோகமில்லை என்பது திண்ணம்.

உபபத்திராதிபர்,

ஆர்ய தர்மம்.
௧௯௰-ஹு புரட்டாசி-மீ ௧௪௨

# விதவா விவாஹமும் காந்தியும்.

(437-ஆவது-பக்கத் தொடர்ச்சி.)

5. நாம் பரிசுத்தர்களாக வாழவேண்டுமானுல், இந்துமதத்தைக்காப்பாற்ற விரும்பினுல் இந்தக் கட்டாய வைதவ்யமாகிய விஷயத்தை ஒழித்துப் போடவேண்டும். பால்ய விதவைகள் இருக்கும் வீட்டுக்காரர்கள் தைர்யமாய் முன் வந்து அப்பெண்களுக்கு மணம் செய்விக்கவேண்டும். அதைப் புனர் விவாகமென்று கூடச் சொல்வதற்கில்லை. முதல் விவாகமென்று தான் சொல்லவேண்டும். அவர்கள் இதற்குமுன் செய்து கொண்டது உண்மையில் விவாகமல்ல என்றும் மிகவும் ஸாரமான முடிவுரையும் எழுதப்பட்டிருக்கின்றது.

இதையும் விசாரிக்கிறேம். நாம் பரிசுத்தர்களாக வாழவேண்டுமானுலும் இந்து மதத்தைக் காப்பாற்ற வேண்டுமென்கிற விருப்பமிருந்தாலும் இந்தக் கட்டாய வைதவ்ய விஷயத்தை ஒழிக்கவேண்டும் என்கிருர். இதுவரையில் இந்த வைதவ்யத்தை விலக்காமல் அநுஷ்டானத்தில் வைத்துக் கொண்டிருப்பதால், இந்துமதம் பரிசுத்தம் இல்லாமலும் ரக்ஷிக்கப்படாமலும் போய்விட்டதை இவர் அறிந்து இந்தச் சிறந்த வுபதேசத்தை நமக்குச் செய்கிருர். விதவா விவாகம் கூடாதென்று எந்தக்காலம் முதல் நம் தேசத்தில் விலக்கப்பட்டு வருகிறதென்று கவனித்தால்:—

मृते भर्तरि या नारी ब्रह्मचर्यव्रते स्थिता ।
सा मृता लभते स्वर्गं यथा ते ब्रह्मचारिणः ॥ பாராசார்.
एक एव पतिर्नार्या यावज्जीवं परायणम् ।
मृते जीवति वा तस्मिन् नापरं प्राप्नुयान्नरम् ॥
अभिगम्य परं नारी पतिष्यति न संशयः ॥ மஹாபாரதம்

**ऊढायाः पुनरुद्वाहं ज्येष्ठांशं गोवधं तथा ।**
**कलौ पञ्च न कुर्वीत भ्रातृजायां कमण्डलुम् ॥** ஆதித்யபுராணம்

இங்கு கூறப்பட்ட ஸ்மிருதி புராணங்களின் வசனங்களைக்கவனித்தால் வெகுகாலமாய் விதவைகளுக்கு விவாகமில்லாமலே விலக்கப்பட்டும் அவ்விதமே அனுஷ்டிக்கப்பட்டும் வருகிறதாகத்தெரிகின்றது. இதனால் நம்மதத்திற்கு அசுத்தி ஏற்படுகிறதாயிருந்தாலும் நம்மதம் அபிவிருத்தி யடையாமலிருப்பதற்கு இது காரணமாயிருந்தாலும் வெகு காலத்திற்கு முந்தியே நம்மதம் மறைந்திருக்க வேண்டும். பல்லாயிரக்கணக்கான வருஷங்களாக விதவைகளுடன்கூட யாதொரு இடையூறுமின்றி உலகில் நடைபெற்றுவரும் நம்மதம் இனி அபிவிருத்தியாகாமல்' போகுமென்றும் விதவா விவாகத்தை நடத்தினால் விருத்தியாகுமென்றும் சொல்வதானது பாலர் கூறும் மொழிபோல் பொருளில்லாமல் இருக்கிறதென்று யாரும் கருதக்கூடியதே.

பின்னும், "பால்ய விதவைகள் எந்தெந்த வீட்டில் இருக்கிறார்களோ அவ்வீட்டுக்காரர்கள் தைரியமாய் முன்வந்து அப்பெண்களுக்கு மணம் செய்விக்கவேண்டும்" என்கிறார்.

எந்த ஆதாரத்தைக்கொண்டு இவர் இவ்விதம் உத்திரவு பண்ணுகிறார், என்று தெரியவில்லை. இவர் அபிப்பிராயப்படி, ஒரு விதவை ஒருவனை மணம்புரிந்து 6 மாதத்துக்குப் பிறகு அவன் மரித்து விட்டால் அவள் கதி என்னவாய் முடியும்? மறுபடியும் அவளுக்கு விவாகம் உண்டா? இல்லையா? விவாகமில்லையென்றால் ஏன் இல்லை? 6 மாதத்திற்கு முன் இவள் விதவையாகவிருந்த காலத்தில் இவளிடமிருந்த கருணை இப்பொழுது எங்கு போய்விட்டது? இவளுக்கு இப்பொழுது போகத்தில் விருப்பமில்லையா? சிறுவயதிலிருப்பதால் மறுபடியும் விவாகம் செய்யத்தான் வேண்டும். புருஷர்களுக்கு 3, 4 ஸ்திரீகளை இழக்கும்படி நேரிடுவது போல், இவர்களுக்கும் 3, 4 புருஷர்களின் காலம் சென்றாலும் மறுபடியும் விவாகம் செய்யத்தான் வேண்டும். ஆகையால், ஸ்திரீகளுக்கு எவ்வளவு காலத்திற்குப் பிறகு போக இச்சை ஏற்படவில்லையோ அதுவரையில் அவர்களுக்குப் பதி மரித்தால் மறுமணம் செய்யத்தான் வேண்டும். முந்தி வந்த பதிக்கு ஒரு புத்

திரன் ஏற்பட்டபிறகு அவன் இறந்துவிட்டால் அந்த ஸமயம் அந்த ஸ்திரீக்கு வபது 14 ஆக இருப்பின் மறுமணம் செய்கிறதா? இல்லையா? காந்தியின் அபிப்பிராயப்படி மறுமணம் செய்யத்தான் வேண்டும். அப்படிச் செய்துவந்த புருஷன் அற்பகாலத்தில் இறந்தானுகில் அவனுக்கு முதல் புருஷனுடைய பையன் கிருத்யம் செய்யவேண்டும். எந்தக் கோத்திரத்தைக் கொண்டு எப்படிச் செய்கிறது? இதற்காகப் புதிதாய் ஒரு தர்மசாஸ்திரத்தையும் காந்தி ஏற்படுத்திவிட்டுப் பிறகு இந்தக் காரியத்தில் முயற்சித்தால் நலமாயிருக்கும். நம் இந்து ஸ்திரீகளை, தேவதாசிகளைப்போல் நித்யஸுமங்கலிகளாகச் செய்ய வேண்டுமென்று காந்திக்கு உண்டாயிருக்கும் கருணை எந்த ஆஸ்திகனுக்குத்தான் ஆச்சரியத்தையுண்டு பண்ணாது! சாஸ்திரங்களில் இதற்கு ஆதாரமில்லையென்று மேல் நிரூபிக்கிறோம்.

(தொடரும்.) உபபத்திராதிபர்.

# சொல்வன்மை.

கடவுள் மாந்தருக்குப் பிறவற்றைக்கொடுத்திருப்பதுபோல வாய் என்ற ஒரு கருவியையும் கொடுத்திருக்கிறார். அந்த வாயின் தொழில்சொல்லுதல். இந்தச் சொல்லே ஒருவருக்குத்தொடங்கியகாரியம் இனிது நிறைவேறும் கருவியாகிறது. சொல்வதில் வல்லவன் எவனோ அவனே தொடங்கிய காரியத்தை நன்கு நிறைவேற்றிக் கொள்ளும் சக்தியைப்பெற்றவனுவன். சொல்லே ஒருவனது அறிவை வளர்ப்பது; நட்பினர் சுற்றத்தார் முதலியவர்களைப் பெருக்குவது சொல்லே தீமைகளையும் மரணத்தையும் கூடத்தருவதாகும். இதனுல் சொல்லுங்கால் எவரும் நன்றாக ஆராய்ந்து பார்த்தே சொல்லுதல் வேண்டுமென்பதுவிளங்கும்.

சொல்லிலே திறமையையும் இனிமையையும், பெற்றிராதவன் பிறவன்மைகளைப் பெற்றிருப்பினும் எடுத்த காரியத்தை நிறைவேற்ற இயலாதவனே ஆவன். அவன் இடைநடுவில் அந்தக்காரியத்தை விட்டுவிட வேண்டியவனே ஆவன். இனிமையான சொல்லுக்கே உலகத்தார்மகிழ்வார். வன்மையான சொல்லைக்கேட்டு மகிழமாட்டார், வெறுப்பினையே எய்துவர். வெப்

பம் பொருந்திய கிரணங்களை உடைய சூரியனது வரவினைக் கண்டு கடல் பொங்குவதில்லை. குளிர்ச்சி (தண்மை) யான கிரணங்களை உடைய சந்திரனது வரவினைக்கண்டே கடல் பொங்குகின்றது. இன்னும் காக்கையும் குயிலும் ஒரே கூட்டில் வளர்கின்றன. இரண்டும் கருநிறமுள்ளனவே. என்றாலும், உலகினர் காக்கையைக் காட்டிலும் குயிலையே உயர்வாகக் கூறுகின்றனர். விலங்குகள் பல இருக்க அவற்றைக் கண்டு வெறுப்படையாத மாந்தர் கழுதையைக் கண்டு வெறுத்துப் பேசுகின்றனர். காரணம் யாது? இனிமையான குரலையும், கொடுமையான குரலையும் கேட்க நேரிடுவதே. அங்ஙனமே உலகினர் முள் நிறைந்திருப்பினும் திராட்சைக் கொடியை வளர்க்கின்றனர்; உருவம் கோணலாயிருப்பினும் வீணையை விரும்புகின்றனர். எவற்றின் பொருட்டு? இனியசுவை நிறம்பிய பழத்தையும், இனிமையான ஓசையையும் தருகின்றமையாலன்றோ?

அறிவுடைய சான்றோரால் "இவன் இனிய சொற்களையே சொல்பவன்" என்று சிறப்பித்துச்சொல்லப்படும் பெருமையைப் பெற்றவனே. உலகினரைச் சொல்லால் வெற்றிக்கொள்ளும் வன்மை வாய்ந்தவனாவன். அந்தப் பெருமையே பிற எல்லாப் பெருமைகளை விடச் சிறந்ததாம். இனிய சொற்களைச்சொல்வதே இம்மையில் நீதியுள்ளவனாகச் செய்பவல்லது; மறுமைக்கான அறப்பயனையும் கூட்டுவிப்பது. இன்சொல்லே ஒருவனுக்கு ஆபரணமாவது. இனிய சொற்களைக் கூறாது வலிய சொற்களைக் கூறுதல் கனியை வேண்டாமென ஒதுக்கிக் காயைப் பெற்றுக்கொள்வது போலாம். பிறர் கூறும் இன்சொல் தனக்கு இன்பத்தைச் செய்கின்றது. என்பதை உணர்ந்தவன் எப்படித்தான் மாத்திரம் இன்சொற்களைக் கூறாமல் வன் சொற்களைக் கூறுவது?

ஒருவனுக்குக் கல்விச் செல்வம் என்றவற்றிலே பெருக்கம் உண்டாவதற்குத் துணை செய்வது சோர்வில்லாத நற்சொல். அவற்றின் கேட்டிற்குத் துணைபோவது சோர்வுற்ற தீச்சொல். கல்வி செல்வம் முதலியவற்றின் பெருக்கத்தையே எல்லோரும் விரும்புவர். கேட்டினை விரும்புவார் ஒருவரும் இரார். ஆதலின் ஒவ்வொருவரும் தீப்பயனைத்தரும்தீச்சொற்களைக்கூறுதல் கூடாது நற்பயனை அளிக்கும் நற்சொற்களைக் கூறுதல் வேண்டும். நற்

சொல்— தனக்கும் பிறருக்கும் நன்மையைப் பயக்கும் சொல்.
தீச்சொல்— தனக்கும் பிறர்க்கும் தீமையைப் பயக்கும் சொல்.

ஒரு சொல் எவ்வளவு இனிமை வாய்ந்திருப்பதாயினும்சரி எவ்வளவு நல்லதாயிருப்பினும் சரி, அது கேட்டவர்க்குப் பயன் படாததாயின் அச்சொல் வீணாகச் சொல்லப்பட்டதேயாம். எந்தச்சொல்லும் முதலில் கேட்பவரை விருப்பத்துடன் கவனமாகக் கேட்குமாறு தனது வசப்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும்; அங்ஙனம் கேட்டவர் பின்னர் எக்காரணங்கொண்டும் அக்கேட்ட வழியிலே நின்று சிறிதும் மாறமுடியாததாகவும் இருத்தல் வேண்டும். கேளாதவரையும் விரும்பிக் கைக்கொள்ளுமாறு தூண்டுவதாகவும் இருத்தல் வேண்டும். குற்றமற்றதாகவும் சுருங்தச்சொல்லி விளங்க வைப்பதாகவும், பெரும் பயனை அளிப்பதாகவும் இருத்தல் வேண்டும். தமர் பிறர் பகைவர் நட்பினர் என்றனைவரும் ஒப்பத்தக்கதாயிருத்தல் வேண்டும். கேட்பவரது தகுதிக்கேற்றதாகவே இருத்தல் நலம். அது தான்உலக நடையை உணர்ந்தவர் சொல் என அறிவுடையோரால் மதிக்கப்படுவது. தன்னை வெல்லக்கூடிய பிறிதொரு சொல் இல்லாதிருப்பதே சொல்லுக்குப் பெருமையாகும். இங்ஙனம் ஆராய்ந்து சொல்லப்படும் சொற்களே சாலச் சிறந்தனவாம்.

இவ்வாறு முற்கூட்டி அறிந்து சொல்பவரே சொல்வன்மை வாய்ந்தவராவர். அன்னார் தமது புகழ்நிலைத் திருத்தல்பொருட்டு எந்நாளும் மனம் தூயராய் இருத்தல் வேண்டும். அவர் குடிப்பிறப்பு கல்வி அறிவு ஒழுக்கம் செல்வம் உருவம் பருவம் முதலியன பொருந்தியவராயிருத்தல் மிக மேன்மையைத் தருவதாம். அவரே பயன்தரும் சொற்களைச் சொல்லவல்லராவர். அவரே பிறர் கூறும் சொற்களின் பயனை அறிந்துகொள்ளத்தக்கவராவர். அவர் பகைவரின்றி வாழ்பவர். அவரது சொல் விளக்கமாகவும் சோர்வின்றியும் அச்சமற்றும் அமையுமாதலின் அவருக்குத் தோல்வியே இல்லை, எங்கும் வெற்றியே. அவர் பலவாகி சொற்களைச் சொல்ல விரும்பமாட்டார். சில சொற்களையே சொல்லித் தமது கருத்தைக் கேட்போர் மனத்திலே பதியவைப்பர். அவர் சொல்லிய சொற்களை உலகத்தார் விரைந்து கேட்பர். அவர் மணம் நிறைந்த மலர் என உலகினரால் உயர்த்திக் கூறப்படுவர்.

தண்டமிழ்தொண்டன்.

# ஸ்ரீ ஜகத்குரு ஸேவை.

நமது பாரதவர்ஷத்தின் க்ஷீணதசையை தினேதினே பார்த்து வருகிறோம். கலியினது ஆரம்ப தசையிலேயே வர்ணதர்மம் ஆச்ரமதர்மம், ஸ்திரீதர்மம், சிஷ்யதர்மம் முதலியவைகள் குன்றி எவ்வகையிலும் அதர்மம் தாண்டவம் புரிகிறதென்றால் கலியின் யௌவனதசையை ஊஹித்தறியலாம். ப்ரத்யக்ஷமாக ச்ருதி ஸ்மிருதி விஹிததர்மங்கள் அதர்மமென போதிக்கப்படுகின்றன. கீர்வாணம் கற்றுக் கரையேறிய பண்டிதர்கள் ஸம்மதி கோராமலே ஆங்கிலம் கற்றுத்தானே மஹர்ஷி என நினைக்கும் சில மேதாவிகள் அசாஸ்திரீயமானவைகளைச் சாஸ்திரீயமென கோஷிக்கின்றனர். கலி பண்டிதர் கிலர் அழைக்கப்படாமலே யாகம் தப்பு ருதுமதீ விதாகம் சர்ஸ்திரீயம். தீண்டாமைக்கு வேதப்ரமாணம் இல்லை என அவர்களுக்கு ஒத்து ஊதுகின்றனர்.

இதை எவ்வகையிலும் எதிர்பார்த்துப் போராட ஆதிசங்கர பகவத்பாதாளின் அவதாரமாகத் தற்காலம் ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபத்யம் வஹிக்கும் ஸ்ரீ ஜகத்குரு அவர்கள் விஜயயாத்திரை செய்கிறார்கள். அக்குருமூர்த்தி பாததூளி பட்டவிடங்களிலெல்லாம் நாஸ்திகம் பறக்கிறது. பண்டைய தர்மம் செழித்து ஓங்குகிறது. இதைஅநுபவத்தில் கண்டவர் அதிசயோக்தி என நினையார். தற்சமயம் காஞ்சீமண்டலத்தின் புண்ய பரிபாகத்தால் மஹாசுவாமிகள் உத்திராபிமுகமாகவிஜயம் செய்கிறார்கள். தென்னாற்காடு ஜில்லா வாஸிகள் ஒவ்வொருவரும் ப்ரதிக்ராமத்திலும் அவாளை அழைத்து ஸேவிப்பதே இக்கலியை வெல்லும் சுலப மார்க்கம். ஆஸ்திகர்கள் குருமஹிமையைப் பொது ஜனங்களுக்கெடுத்துக் கூறி ஸ்ரீமதாசாரிய ப்ரசாதத்தைப் பெற்று அவாளது வதநகமலத்திலிருந்தும் பெருகும் அமிருதத்தை ஆஸ்வாதிக்கும்படி வணக்கத்துடன் பிரார்த்திக்கிறேன்.

குருபக்தன்,

ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா.

வேதயாக மஹிமையை தேவர்களே ப்ரத்யக்ஷமாக மனுஷ்யர்களுக்கு உபதேசிப்பது போல் வருணன் கருணை புரிய தாபத்தை யடைந்த பூமிதேவிக்கும் மனிதவர்க்கத்தின் உள்ளத்திற்கும் ஆனந்தமுண்டாகும்படி குளிர் மழை பொழிந்தது. ரித்விக்குகளுக்கு ஸம்பாவனையும் பிராமணர்களுக்குப் பூரிதக்ஷிணையும் ஆஸ்திக சிகாமணிகளுக்கு யக்ஞேச்வர ப்ரஸாதமும் அளிக்கப் பட்டது.

குருபக்தன்,
ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

---

# ஸ்ரீ கிருஷ்ணவதாரத்தின் தத்வம்.

ஸர்வலோகசரண்யனை பகவான் துஷ்டநிக்ரஹம், சிஷ்ட பரிபாலனம், தர்மஸம்ஸ்தாபனம் செய்வதற்காக எடுத்த அநேக அவதாரங்களில் பத்தே மிகவும் பிரஸித்தமாய்க்கொண்டாடப் படுகின்றன. இத்தசாவதாரங்களில் ஸ்ரீகிருஷ்ணவதாரம் எட்டாவதாகும். ஸாமான்யமான நம்முடைய சிசுக்கள் பிறப்பதை ஜனனம் என்றும் அவைகள் பூமியைவிட்டு மறைவதை மரணம் என்றும் கூறுகிறோம். ஆனல் பகவான் பூமியில் பிறப்பதை அவதாரம்என்றும் அவர் பூமியைவிட்டு அந்தர்த்தானமடைவதைப் பரந்தாமப்பிரவேசம் என்றும் வழங்கவேண்டும். நம்மிற் பெரும்பான்மையோர் ஸ்ரீகிருஷ்ணஜனனம் என்றே வழங்கிவருகிறார்கள். அது மானிடரூபமாய் அவர் அவதரித்தபடியால் அந்ததர்மத்தை அவரிடமும் ஆரோபித்துக்கூறுவதாகும். அவர் ஸாதாரணமான குழந்தைகளைப்போல் மாதாபிதாக்களின் சுக்லசோணித ஸம்பந்தத்தால் பிறப்பவரா? **इच्छामात्रं प्रभोः सृष्टिः** என்றபடி தான் நினைத்தமாத்திரத்தில் எத்தேசத்திலாவது, எக்காலத்திலாவது எவ்விடத்திலிருந்தாவது எந்த ரூபத்தினுலாவது அவதரிக்க ஸமர்த்தரல்லவா!

ஸ்ரீ கிருஷ்ணர்சுக்லசோணித ஸம்பந்தத்தினுல் பிறக்கவில்லையென நிரூபித்துவிட்டால் அதை உதாரணமாகக்கொண்டு மற்ற எல்லா பகவதவதாரங்களிலும் அவ்வாறேதான் என்று நாம் நிச்சயிக்கலாம். ஆகையால் ஸ்ரீ கிருஷ்ணவதார விஷயமாகச் சிறிது ஆராய்வோம்.

மஹான்களின் குணங்களை வர்ணிக்குங்கால் **क्षमया पृथिवी-सम:** 'பொறுமையில் பூமியைப்போன்றவன்' எனச் சொல்லுவது வழக்கமல்லவா. அவ்வளவு பொறுமைவாய்ந்த பூமிதேவியும் அஸுரர்களின்பெரும்பாரத்தைச்சகியாதவளாய்பிரம்மதேவரைச் சரணமடைந்தாள். அவரும் தம் பரிவாரபூதர்களான மற்றதேவதைகளுடனும் பூதேவியுடனும் க்ஷீரஸமுத்திரத்தின் வடகரையை அடைந்து ஸ்ரீ மஹாவிஷ்ணுவைத் தியானம்செய்தார். ஸ்தோத்திரத்தினால் ஸந்தோஷமடைந்து அவர்முன் தோன்றின பகவான் அவர்களின் விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்து எல்லாதேவர்களையும் தேற்றியனுப்பித்தார். ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் செய்து காப்பதாய் வாக்களித்தார்.

இது நிற்க, பிர்ம்மதேவர் முன்னொரு ஸமயம் அமிருதத்தைக் கரக்கும்படியான அனேக பசுக்களை வருணனுக்குக்கொடுத்திருந்தார். அவைகளை கச்யபருஷி தன் மனைவிகளான அதிதி, ஸுரபி இருவர்களின் தூண்டுதலின்பேரில் அபகரித்துக்கொண்டு போனார். இதைக்கேள்வியுற்ற பிரம்மா கச்யபரை "நீர் க்ஷத்ரிய குலத்திற்பிறந்து பசுக்களைக்கொண்டு ஜீவனம் செய்வீராக." (அதாவது அநேக சிற்றரசர்களுக்குச் சக்கிரவர்த்தியாயிராமல் கேவலம் பசுக்களினால் ஜீவனம் செய்வது க்ஷத்திரியகுலத்திற்கு அவமானத்தைக்கொடுப்பது; என்று தாத்பர்யம்.) என்று சபித்தார். அந்தக் கச்யபரே அப்போது பூமியில் வஸுதேவராகவும் அவருடைய அனேக பார்யைகள் தேவகி ரோஹிணீமுதலியோர்களாகவும் பிறந்திருக்கின்றனர். மேலும் கச்யபரும் பத்னீஸமேதராய் வெகுகாலம் தபஸ்செய்து பகவானே தனக்குப்பிள்ளையாகப் பிறக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டிருக்கிறார். இவை யாவற்றையும் மனதிற்கொண்டு பகவான் வஸுதேவருடைய புத்திரனாக அவதாரம் செய்தார்,

அவர் அவதரித்தது சிராவண மாதம் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமி திதி நடுராத்திரி ரோஹிணீ நக்ஷத்திரம் இதை ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி என்றும் கூறுவதுண்டு.

பகவான் எந்த நேரத்திலும் எந்த திதியிலும் அவதரிக்கவல்லவர் என்று முன்பே கூறப்பட்டது. ஆயினும் அவர் அஷ்டமி திதியில் ஏன் அவதரிக்கவேண்டும்? நவமியன்றாவது ஸப்தமி

யன்றுவது கூடாதா ? ராத்திரியில் ஏன் ? பகலிலாவது காலையி லாவது கூடாதா ? என்ற கேள்விகளுக்கு ஒரு கவி பின்வருமாறு உத்ப்ரேக்ஷை செய்கிறார்.

**दिगष्टके रात्रिचरान्जिगीषोर्तिथिर्निशासाच गुणोचितैव ॥**

ருக்மிணீ சவிஜயம்.

அஷ்டதிக்குகளிலும் உள்ள ராக்ஷஸர்களைக் கொல்லப் போகிறேன் என்பதைத் தெரிவிக்க அஷ்டமி திதியிலும், ராக்ஷஸர்களுக்கோ நிசாசரர்கள் எனப்பெயர், அதாவது ராத்திரியில் ஸஞ்சரிப்பவர்கள். அவர்களைக் கொல்லவேண்டுமாயின் இரவில் அல்லவா போகவேண்டும் என்ற லோக நியாயத்தைத் தெரிவிக்க நடு ராத்திரியிலும் அவதரித்தார். அவ்வரக்கர்களை ஜயத்துடனேயே ஸம்ஹரிக்கிறார் என்பதற்கு ஜயந்தீ என்ற பெயரும் ஓர் அறிகுறியாகும்.

பகவானுடைய அவதார காலத்தில் கந்தர்வகணங்கள் கானம் செய்தனர். திசைகளெல்லாம் நிர்மலமாயிருந்தன. தேவர்கள் புஷ்பவிருஷ்டி பொழிந்தனர். பேரி, மிருதங்கம் முதலிய வாத்தியங்கள் முழங்கின. மந்தமாருதம் வீசிற்று. சுருக்கமாகச் சொல்லின் எல்லாவித சுப சகுனங்களும் ஏற்பட்டு எல்லாப் பிராணிகளும் ஸந்தோஷத்துடன் இருந்தன.

இது இவ்வாறாக, வஸுதேவருக்குப் பிதா என்ற பட்டமும் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு அவருடைய புத்ரன் என்ற பட்டமும் எப்படித் தகும் ?

**य एष पुत्संज्ञितनारकस्थान्जनान्स्वनामस्मरणेन पाति ।**
**स दृष्टिग: सन्वसुदेवपत्न्या: कथं न पुत्र: शतपत्रनेत्र: ? ॥**

புத்ரன்என்றபதத்திற்குப் புத் என்ற நரகத்திலிருந்து காப்பாற்றுகிறவன் என்று அர்த்தம். இந்தக் கிருஷ்ணரோ தன் நாமத்தை ஸ்மரிக்கும் எல்லாஜனங்களையும் அதே நரகத்திலிருந்து காப்பாற்றுகிறார். வஸுதேவன் தேவகி இருவர்களையும் அந்நரகத்திலிருந்து ரக்ஷிக்கிறார். இவ்விஷயத்தில் அவர் அவர்களுக்கு எப்படிப் புத்ரனாகமாட்டார் ? (அவர்களின் சுக்லசோணித ஸம்பந்தத்தால் பிறந்ததால் புத்ரன் என்ற பெயர் அல்ல. ஆனால் புத் என்ற நரகத்திலிருந்து காக்கிறபடியால் புத்ரன் என்று தாத்பர்யம்)

यदीयरूपं प्रकटीकरोति पिता स तस्येति हि वेदवादः।
तथाविधस्यानकदुन्दुभेस्तत्पितृत्वमप्यस्तु न तेनहानिः॥

ஒருவனை உண்டாக்கின மாத்திரத்தாலேயே ஒருவன் பிதாவாக மாட்டான். மேலும் ஒருவனுடைய ஸ்வரூபத்தை எவன் வெளிப்படுத்துகிறானோ அவன் அவனுக்குப் பிதா என்று வேதத்திலேயே கூறியுள்ளது அதுபோல் வஸுதேவர் மூலமாய் ஸ்ரீ கிருஷ்ணரின் ஸ்வரூபம் பிரஸித்தியடைந்தால் வஸுதேவர் பிதாவாகவிருக்கட்டும் அதனால் என்ன நஷ்டம்?

जानाति माता परमात्मजातं नूनं पितापि क्वचिदेव लोके।
ताभ्यामनङ्गीकृत कृष्णजन्म कोवापुमान्साधयितुं समर्थः॥

உலகில் ஜனங்கள் திரள் திரளாகக் கூடும் உற்சவகாலங்களில் திக்கற்று அலைந்து திரியும் ஓர் குழந்தையின் தாய் தந்தையர் யாவர் என்று நாம் எப்படி நிர்ணயிக்கிறோம்? அக்குழந்தையைப்பெற்ற தாயாருக்குத் தன் பிள்ளை என்று நன்றாய்த் தெரியுமாதலால் 'இது என் பிள்ளை' என்று சொல்கிறாள். இல்லாவிடில் தகப்பன் 'இது என் குழந்தை' என்று சொல்கிறான். அதுபோல இங்கு வஸுதேவனும் தேவகியும் ஸ்ரீ கிருஷ்ணரைப் பார்த்தவுடன் என்ன சொல்லிக்கொண்டனர் என்று கவனிப்போம். வஸுதேவரோ "ஸர்வலோகேஸ்வரனும் பிரகிருதிக்கும் மேலானவனும் சுத்தமான ஆனந்தஸ்வரூபமுடையவனுமான பகவானே நீர் என்று எனக்குத் தெரியும்" என்று ஸ்தோத்திரம் செய்திருக்கிறார். தேவகியோ, "பிரளயகாலத்தில் சராசரப்பிரபஞ்சங்களையே தனது உடலில் தரித்து க்ரீடை செய்கிற பகவான் என்னுடைய கர்ப்பத்தில் இருந்தார் என்பது லோகவிடம்பனம்" என்று ஸ்தோத்திரம் செய்திருக்கிறாள். இப்படியாக நாம் ஸ்ரீ கிருஷ்ணருடைய மாதா பிதாக்கள் என்று கருதும் அவர்களே அவர் தங்களுடைய புத்திரன் அல்ல. ஸர்வஜகத்துக்கும் அவரே பிதா என்று ஸ்தோத்திரம் செய்து தம் பிள்ளை அல்லவென்று கூறியிருக்கும் போது நாம் எப்படி அவர்களின் புத்திரன் என்று ஸாதிப்பது?

(தொடரும்)

ஸ்ரீமாத்வஸபா,
கும்பகோணம்.

M. ராமராவ்,
காரியதரிசி.

பின்னர் பெருமானார் கைலாஸத்தைவிட்டுத் தமது நிலையமாகிய க்ஷேத்திரங்கள்தோறும் சென்று தேவியைப் பார்க்க எங்கும் இல்லாமையைக்கண்டதும் தேவிக்கு ராஜஸ்தானமாகிய காஞ்சி காமகோடி பீடத்திலும் இல்லாதிருப்பளோ என்று காஞ்சிக்கு வந்து காமாக்ஷிதேவி அங்கு கௌரியாயிருத்தலைக் கண்டு அதிசயமுற்று இவள் சாக்ஷாத் கௌரியென்று நினைத்துத் தமக்குண்டாயிருக்கும் சக்தி காமம் தணியுமாறு சமீபித்தனர். மகா சிருங்காரமோகினி வடிவுடையவளாயும், தவரூபியாயும், அரிய தவத்தைச் செய்பவளாயும் இருக்கின்ற கௌரி பெருமான் சமீபித்துவருதலைக்கண்டு பிணக்குடையாள்போன்று அவரைப் பார்த்து “நீ யார்? காமாதுரனாயிருக்கின்றாய்? இங்கே நீ யாது காரணமாய் வந்தனை? நீ சங்கரனா?” என்று கேட்க, காம சக்திக்கு ஐக்கியாராய்க் காமலீலையை விரும்பியிருக்கின்ற பெருமானார் “ஹே, கௌரி, நீ எனக்கு மனோன்மணியாகிய பத்னியல்லவா? நீ எனக்கு இஷ்டமான க்ஷேத்திரங்களை எல்லாம் விட்டு இவ்விடத்தில் பிரும்ம விஷ்ணுருத்திரர்கட்குக் காரணமான ஆதி சக்தி பீடத்தில் மாத்திரம் வந்திருக்கிற காரணம் என்னை? எனது குடும்பினியாயும், பிரியையாயும், எனது ஹிதமான காமங்களுக்கெல்லாம் சமனியாயும் இருக்கின்ற நீ இப்பொழுது என்னிடத்தில் கோபங் கொண்டிருக்கிறவள் போல வருத்துகின்ற காரணமென்னை? இவைகட்குக் காரணம் கூறி உன்னாலுண்டாகிய என்னாசையைத் தணிவிப்பாய்” என்று கூற, திரிபுராம்பிகை சிவபெருமானைப் பார்த்து “உமக்கிப்போது உண்டாக்கிய காமத்தைத் தணிவிக்கும் கௌரி நான் அன்று, காமசாந்திக்கு என்னை வேண்டுவதை விட்டு மன்மதனை வேண்டுவீராயின் அந்தக்காமசாந்தி அவன் செய்து வைப்பான்” என்றபொழுது பெருமானார் தேவி மன்மதனுக்குஉபகாரார்த்தமாயிருக்கும்மாறுக்கருணையைநினைந்து அவள் கருணையை மறுப்பவர் போன்று “மன்மதன்பால் யான் செல்லேன்” என்று அம்பிகையினுடைய திருக்கரத்தைப் பற்றச் செல்லும்பொழுது அவ்வம்பிகை கோடி மன்மதர்களைத் தனது கடாக்ஷ வீக்ஷணத்தால்உண்டாக்கிப் பெருமான் மேல் ஏவினள். அவர்கள் அச்சிவபெருமானைச் சூழ்ந்து போர் செய்யத் தொடங்கும்பொழுது அவர் ஒரு க்ஷணத்துக்குள் கோடி உருத்திரர்களையுண்டாக்கி அவர்கள் மேல் தூண்டினர். அவர்கள் அந்தக்

கோடி மன்மதர்களையும் பஸ்மீகரப் படுத்தினர்கள். அதுகண்ட தேவி முன் மன்மதன் இந்தப் போரில் 'நான் மடிய வருமாயின் என்னை மீட்டும் படைக்கவேண்டும்.' என்று வேண்டிய வார்த்தை எண்ணி மறுபடியும் கோடி மன்மதர்களைப் படைத்தனள். பெருமானும் மீண்டும் கோடி உருத்திரர்களைப் படைத்தனர். இவ்வண்ணம் பெருமானும் பெருமாட்டியும் உருத்திர கோடிகளையும், மன்மத கோடிகளையும் படைத்து இருவருக்கும் போர் மூட்டித்தாமிருவரும் சாக்ஷியாக விருந்தனர். பின்னர் அவ்விரு கோடியரும் அளவிடற்கரிய போர்புரியும்போது தேவியினுடைய லீலா சங்கற்பத்தால் மன்மதகோடிகள் உருத்திர கோடிகளை வென்றனர். அதுகண்ட மன்மதன் ஸந்தோஷித்தவனாய்த் தனதுபஞ்சபாணங்களையும் உருத்திராதியர் மேல் பிரயோகம் செய்யவெண்ணினன். அவனது எண்ணத்தையும், அவனெண்ணத்தை முடிக்க வெண்ணியிருக்கும் தேவியினுடைய திருவுள்ளத்தையும் பெருமான் அறிந்தவராய் இருவரெண்ணம்போல் இசைவாராயினர்.

ஆகவேமன்மதன் தானெண்ணியபடியே தாமரை, அசோகம், மா, மல்லிகை, நீலோற்பலம் என்னும்ஐவகை மலர்களையும் முறையாக எவினன். அம்மலர்களைப் பெருமான் அழிக்கவெண்ணாமல் அங்கீகரிக்க வெண்ணித் தாமரையைத் தமக்கு ஆசனமாயும் அசோகையைத் தமது மேனிக்கு அழகு செய்வதாகவும், மாந்தளிரை பீதாம்பரமாகவும், மல்லிகையை மாலையாகவும், நீலோற்பலத்தை நெற்றிக்கண்ணுக்குக் குளிர்ச்சிசெய்வதாகவும்கொண்டு வீற்றிருக்க; மன்மதன் "அன்று தாருகாவனத்தில் உம்மை வணங்காத முனிவர்களின் பத்தினிகளிடத்துப் பலிபாத்திரம் ஏந்திச் சென்ற பொழுது நீர்பெற்றது என்னை? இன்று அப்பலி ஏற்று அம்பிகைபால் செல்வீராயின் நீர் வேண்டியவற்றைப் பெறலாமன்றோ?" என்று சொல்லவும் பெருமான் மகிழ்ந்து "அது யான் இப்பொழுது செய்யத்தக்கதே நன்று கூறினாய்." என்று அந்த க்ஷணமே மன்மதனுடன் அம்பிகைபால் பலியேற்கச்சென்றனர். அவரது கோலத்தைத் திரிபுராம்பிகை பார்த்து மன்மதன் அபீஷ்டம் நிறைவேறிற்று என்று திருவுளம் மகிழ்ந்து "பெருமானே, மன்மதனை யுத்தேசித்துச் செய்த நம்மிருவர் லீலைகளும் முடிந்தன. இனித் தேவரீர் கௌரியோடு கூடிக் காம

சாந்தியுடையவராயிருக்கலாம்." என்று சொல்லித் தம்மாலுண்டாக்கப்பட்ட மன்மதர்களையும் அங்கம் பெற்ற மன்மதனையும் தம்முடைய காமகோடி பீடத்துக்கு நேராக ஆகாயத்தில் நக்ஷத்திர ரூபமாக வசிக்கச் செய்து பராசக்தி ஸ்வரூபத்தில் மறைந்தனள் பெருமானும் ஒட்பான பீடத்தில் காமரூபத்தைப் போய்ச் சேர்ந்தனர்.

மன்மதர்கள் நக்ஷத்திர ரூபமாய்ஆகாயத்தில் அவ்விடத்தில் வசிக்கின்றார்கள். ஆதலால் சூரியன் முதலிய நவக்கிரகங்களும் அந்த மன்மத மண்டலத்துக்கு நேராக வரும்பொழுது அவ்வழியாய்ப் போகாமல் பிரதக்ஷணமாய்ப் போகின்றனர். அக்காரணத்தால் காஞ்சி மண்டலம் திசைமயக்குடையதென்றும் அம்பிகையினால் உண்டாக்கப்பட்ட மன்மதர்களால் உருத்திரகோடிகள் ஜயிக்கப்பட்டார்களாதலால் ருத்திரஜித் க்ஷேத்திரமென்றும் சொல்லப்பட்டது.

இந்தச் செய்திகள் இங்ஙனமிருக்க, ஓர் காலத்தில் பிர்ம்மதேவன் பூலோகத்திலுள்ள ஸ்ரீ கைலாஸம் முதலிய சிவக்ஷேத்திரங்களைத் தரிசிக்கவெண்ணித் தன்னுலகைவிட்டுப் பூவுலகை வந்தடைந்து கைலாசம் முதலிப சிவக்ஷேத்திரங்களைத் தரிசிக்கும்பொழுது அம்பிகை ஓரிடத்தும் இல்லாமையைக்கண்டு இதுவென்ன காரணம் என்று தனது ஞானதிருஷ்டியால் எண்ணிப்பார்க்க இது காமாக்ஷிதேவி செய்த லீலை என்று ஒருவாறுணர்ந்து அந்த க்ஷணமே காஞ்சி மண்டலத்துக்கு வந்து சிவக்ஷேத்திரங்கள்தோறும் சிவபெருமான் சான்னித்தியமாயிருப்பதுபோல் அம்பிகையும் சான்னித்தியமாய் இருந்து காக்ஷி கொடுக்கவேண்டுமென்று திரிபுராம்பிகையைப் பிரார்த்தித்து வந்தித்துப் பலவாறாகத் துதித்து வழிபட்டு. ஹ்ருதய கமலத்தில் அம்பிகையைத் தியானித்துப்பன்னிரண்டு வருஷம் தவம் செய்துவந்தனள். இராஜராஜேச்வரி பிரமன்பால் கருணையுடையவராய்ப் பிரசன்னையாய் "ஓ, பிரமனே நாம் மன்மதன் வேண்டியவாறே அனுக்கிரகஞ்செய்த அனுக்கிரகத்தைப் பரிபாலிக்கும் பொருட்டுச் சிவபெருமானுக்குப் போக சக்தி உருவம் காணாமலிருக்கச் சிவாலயங்கள்தோறும் கௌரியை இல்லாமற் செய்தோம்.

நீ தரிசிக்க வேண்டுமாயின் எல்லா க்ஷேத்திரங்கள்தோறும் நீயேசென்று கௌரி பிரதிஷ்டைசெய்து சிவதரிசனத்தோடு அம்பிகை தரிசனமும் செய்து மகிழக்கடவாய்'' என்றுஅநுக்கிரகம் செய்தனர்.

பிரமன் தேவியின் திருவாக்கைக் கேட்டுத் திருவடியில் வீழ்ந்து வணங்கி "ஓ ஜகன்மாதாவே, இப்பொழுது இந்தக்ஷேத்திரத்தில் சிவாலயங்கள்தோறும் கௌரியாகிய அம்பிகையைத் தரிசித்தாலல்லவோ ஏனையக்ஷேத்திரங்களுக்கும்போய் அம்பிகையைப் பிரதிஷ்டை செய்து நான் தரிசித்தல்வேண்டும். இங்கு தரிசிக்கும் வகை எப்படி'' யென்று விண்ணப்பம் செய்யத் தேவி 'இந்த க்ஷேத்திரத்தில் முன்னர் உருத்திர கோடிகட்கும் மன்மத கோடிகட்கும் நேர்ந்த யுத்தத்தில் அவர் இங்குள்ள சூதவிருக்ஷத்தடியில் கௌரி சகிதமாய்ச் சிவபெருமானுர் ஒட்டியாண பீடத்தில் சென்றனராதலால் ஜோதிலிங்க ஸ்வரூபராய் வெளிப்படுவர். அப்பொழுது உனக்குக் கௌரியானவள் சூதலிங்க சகிதமாகக் காணப்படுவாள்.'' என்றனர். அதுகேட்ட பிரமன் "ஹே, அம்பிகே, வருஷம்தோறும் இந்த க்ஷேத்திரத்தில் சூத நாதருக்குத் திருக்கல்யாண மஹோற்சவம் நடத்தவேண்டுமே. அதனை எந்த உபாயத்தினுல் நடடுத்துவது? என்றுவிண்ணப்பம் செய்ய மஹா தேவி ஒரு முகூர்த்தகாலம் ஒன்றும் சொல்லாது மௌனமாயிருந்து பின் சொல்லத் தொடங்கினுர்.

"ஓ, வாக்பதியே, இந்த க்ஷேத்திரத்திலுள்ள சிவாலயங்கள் தோறும் இருக்கத்தக்க சக்திகளெல்லாம் என்னிடத்திற் கலந்திருக்கிறபடியால் அச்சக்திகளெல்லாம் ஒரு சக்தியாய் ஒருருவாகி ஏகாம்பிகை என்னும் நாமத்துடன் எனது நெற்றிக்கண்ணினின்றும் ஒரு க்ஷணத்துக்குள் சித்ஜோதி ஸ்வரூபமாய்த் தோன்றப் போகின்றுள். அந்த அம்பிகை பூர்வத்தில் ஏகாம்பர நாதனை ஏகாக்ர சித்தத்தோடும் தியானிக்கவேண்டிய பாவனையால் அதிலாவண்ய சௌந்தரியத்துடன் தபோரூபியாய்த் தவம் செய்து பின்னர் நாயகனைக் கலந்து நித்தியகல்யாணியாய் விளங்கினவள். ஆதலால் நீ என்னிடத்திற்றேன்றும் அந்த ஜோதிஸ்வரூபமாகிய அம்பிகைபோலும் சுவர்ணத்தினுல் செய்து என்னுடைய இந்த ஆலயத்தில் ஸ்திரமானவிடத்தில் ஸ்திரமாகஸ்தாபித்து விவாக